ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# திருக்குறுந்தாண்டகம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# திருக்குறுந்தாண்டகம்

‡ நிதியினைப் பவளத் தூணை ⋆
நெறிமையால் நினைய வல்லார் ⋆
கதியினைக் கஞ்சன் மாளக் ⋆
கண்டு முன் அண்டம் ஆளும் ⋆
மதியினை மாலை வாழ்த்தி ⋆
வணங்கி என் மனத்து வந்த ⋆
விதியினைக் கண்டு கொண்ட ⋆
தொண்டனேன் விடுகிலேனே ‖ **1** ‖

காற்றினைப் புனலைத் தீயைக் ⋆
கடி மதிள் இலங்கை செற்ற ஏற்றினை ⋆
இமயம் மேய ⋆
எழில் மணித் திரளை ⋆
இன்ப ஆற்றினை அமுதந் தன்னை ⋆
அவுணன் ஆர் உயிரை உண்ட கூற்றினை ⋆
குணங்கொண்டுள்ளம் ⋆
கூறு நீ கூறுமாறே ‖ **2** ‖

பாய் இரும் பரவை தன்னுள் ⋆
பரு வரை திரித்து ⋆
வானோர்க்காய் இருந்தமுதம் கொண்ட ⋆
அப்பனை எம் பிரானை ⋆
வேய் இருஞ்சோலை சூழ்ந்து ⋆

விரி கதிர் இரிய நின்ற ⋆
மாய் இருஞ்சோலை மேய ⋆
மைந்தனை வணங்கினேனே ‖ **3** ‖

கேட்க யான் உற்றதுண்டு ⋆
கேழலாய் உலகம் கொண்ட ⋆
பூக் கெழு வண்ணனாரைப் ⋆
போதரக் கனவில் கண்டு ⋆
வாக்கினால் கருமம் தன்னால் ⋆
மனத்தினால் சிரத்தை தன்னால் ⋆
வேட்கை மீதூர வாங்கி ⋆
விழுங்கினேற்கினியவாறே ‖ **4** ‖

இரும்பனன்றுண்ட நீர் போல் ⋆
எம் பெருமானுக்கு ⋆
எந்தன் அரும் பெறல் அன்பு புக்கிட்டு ⋆
அடிமை பூண்டுய்ந்து போனேன் ⋆
வரும் புயல் வண்ணனாரை ⋆
மருவி என் மனத்து வைத்து ⋆
கரும்பின் இன் சாறு போலப் ⋆
பருகினேற்கினியவாறே ‖ **5** ‖

மூவரில் முதல்வன் ஆய ⋆
ஒருவனை உலகம் கொண்ட ⋆
கோவினைக் குடந்தை மேய ⋆
குரு மணித் திரளை ⋆
இன்பப் பாவினைப் பச்சைத் தேனைப் ⋆
பைம் பொன்னை அமரர் சென்னிப் பூவினை ⋆

புகழும் தொண்டர் ⋆
என் சொல்லிப் புகழ்வர் தாமே ‖ **6** ‖

இம்மையை மறுமை தன்னை ⋆
எமக்கு வீடாகி நின்ற ⋆
மெய்ம்மையை விரிந்த சோலை ⋆
வியன் திருவரங்கம் மேய ⋆
செம்மையைக் கருமை தன்னைத் ⋆
திருமலை ஒருமையானை ⋆
தன்மையை நினைவார் என்தன் ⋆
தலைமிசை மன்னுவாரே ‖ **7** ‖

வானிடைப் புயலை மாலை ⋆
வரை இடைப் பிரசம் ஈன்ற ⋆
தேன் இடைக் கரும்பின் சாற்றைத் ⋆
திருவினை மருவி வாழார் ⋆
மானிடப் பிறவி அந்தோ ! ⋆
மதிக்கிலர் கொள்க ⋆
தந் தம் ஊனிடைக் குரம்பை வாழ்க்கைக்கு ⋆
உறுதியே வேண்டினாரே ‖ **8** ‖

உள்ளமோ ஒன்றினில்லாது ⋆
ஓசையில் எரி நின்றுண்ணும் ⋆
கொள்ளிமேல் எறும்பு போலக் ⋆
குழையுமால் என்தன் உள்ளம் ⋆
தெள்ளியீர் ! தேவர்க்கெல்லாம் ⋆
தேவராய் உலகம் கொண்ட ⋆

ஒள்ளியீர் உம்மை அல்லால் ⋆
எழுமையும் துணை இலோமே ॥ **9** ॥

சித்தமும் செவ்வை நில்லாது ⋆
என் செய்கேன் தீ வினையேன் ⋆
பத்திமைக்கன்புடையேன் ஆவதே ⋆
பணியாய் எந்தாய் ⋆
முத்தொளி மரகதமே ! ⋆
முழங்கொளி முகில் வண்ணா ⋆
என் அத்த ! நின் அடிமை அல்லால் ⋆
யாதும் ஒன்றறிகிலேனே ॥ **10** ॥

தொண்டெல்லாம் பரவி நின்னைத் ⋆
தொழுதடி பணியுமாறு கண்டு ⋆
தான் கவலை தீர்ப்பான் ஆவதே ⋆
பணியா எந்தாய் ⋆
அண்டமாய் எண் திசைக்கும் ⋆
ஆதியாய் நீதி ஆன ⋆
பண்டமாம் பரம சோதி ! ⋆
நின்னையே பரவுவேனே ॥ **11** ॥

ஆவியை அரங்க மாலை ⋆
அழுக்குடம்பெச்சில் வாயால் ⋆
தூய்மை இல் தொண்டனேன் நான் ⋆
சொல்லினேன் தொல்லை நாமம் ⋆
பாவியேன் பிழைத்தவாறென்று ⋆
அஞ்சினேற்கஞ்சல் என்று ⋆

காவி போல் வண்ணர் வந்து ⋆
என் கண்ணுளே தோன்றினாரே ‖ **12** ‖

இரும்பனன்றுண்ட நீரும் ⋆
போதரும் கொள்க ⋆
என்தன் அரும் பிணி பாவம் எல்லாம் ⋆
அகன்றன என்னை விட்டு ⋆
சுரும்பமர் சோலை சூழ்ந்த ⋆
அரங்க மா கோயில் கொண்ட ⋆
கரும்பினைக் கண்டு கொண்டு ⋆
என் கண் இணை களிக்குமாறே ‖ **13** ‖

காவியை வென்ற கண்ணார் ⋆
கலவியே கருதி ⋆
நாளும் பாவியேன் ஆக எண்ணி ⋆
அதனுள்ளே பழுத்தொழிந்தேன் ⋆
தூவி சேர் அன்னம் மன்னும் ⋆
சூழ் புனல் குடந்தை யானை ⋆
பாவியேன் பாவியாது ⋆
பாவியேன் ஆயினேனே ! ‖ **14** ‖

முன் பொலா இராவணன் தன் ⋆
முது மதிள் இலங்கை வேவித்து ⋆
அன்பினால் அனுமன் வந்து ⋆
ஆங்கடி இணை பணிய நின்றார்க்கு ⋆
என்பெலாம் உருகி உக்கிட்டு ⋆
என்னுடை நெஞ்சம் என்னும் ⋆

அன்பினால் ஞானநீர் கொண்டு ⋆
ஆட்டுவன் அடியனேனே ॥ **15** ॥

மாய மான் மாயச் செற்று ⋆
மருதிற நடந்து ⋆
வையம் தாயமா பரவை பொங்கத் ⋆
தட வரை திரித்து ⋆
வானோர்க்கீயுமால் எம் பிரானார்க்கு ⋆
என்னுடைச் சொற்கள் என்னும் ⋆
தூயமா மாலை கொண்டு ⋆
சூட்டுவன் தொண்டனேனே ॥ **16** ॥

பேசினார் பிறவி நீத்தார் ⋆
பேர் உளான் பெருமை பேசி ⋆
ஏசினார் உய்ந்து போனார் ⋆
என்பதிவ் உலகின் வண்ணம் ⋆
பேசினேன் ஏச மாட்டேன் ⋆
பேதையேன் பிறவி நீத்தற்கு ⋆
ஆசையோ பெரிது கொள்க ⋆
அலை கடல் வண்ணர் பாலே ॥ **17** ॥

இளைப்பினை இயக்கம் நீக்கி ⋆
இருந்து முன் இமையைக் கூட்டி ⋆
அளப்பில் ஐம் புலன் அடக்கி ⋆
அன்பவர் கண்ணே வைத்து ⋆
துளக்கம் இல் சிந்தை செய்து ⋆
தோன்றலும் சுடர் விட்டு ⋆

ஆங்கே விளக்கினை விதியின் காண்பார் ⋆
மெய்ம்மையை காண்கிற்பாரே ॥ **18** ॥

‡ பிண்டியார் மண்டை ஏந்திப் ⋆
பிறர் மனை திரிதந்துண்ணும் ⋆
உண்டியான் சாபம் தீர்த்த ⋆
ஒருவன் ஊர் ⋆
உலக மேத்தும் கண்டியூர் அரங்கம் மெய்யம் ⋆
கச்சி பேர் மல்லை என்று மண்டினார் ⋆
உய்யல் அல்லால் ⋆
மற்றை ஆர்க்குய்யல் ஆமே ॥ **19** ॥

‡ வானவர் தங்கள் கோனும் ⋆
மலர்மிசை அயனும் ⋆
நாளும் தே மலர் தூவி ஏத்தும் ⋆
சேவடிச் செங்கண் மாலை ⋆
மான வேல் கலியன் சொன்ன ⋆
வண் தமிழ் மாலை நால் ஐந்தும் ⋆
ஊனம் அதின்றி வல்லார் ⋆
ஒளி விசும்பாள்வர் தாமே ॥ **20** ॥

அடிவரவு — நிதியினை காற்றினை பாயிரும் கேட்க இரும்பு மூவரில் இம்மையை வானிடை உள்ளம் சித்தம் தொண்டு ஆவியை இரும்பு காவியை முன்பொலா மாயம் பேசினார் இளைப்பினை பிண்டியார் வானவர் மின்

திருக்குறுந்தாண்டகம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்